தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண். 77/ந/2022
நாள். 29.07.2022

திரு. மதுரை பரூக் அகமது,
வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
வாணியம்பாடி நகராட்சி,
திருப்பத்தூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி காதர்பேட்டை, ஆசிரியர் குடியிருப்பு, முதல்குறுக்கு, முதல் தளம், கதவு எண்.4/75 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மதுரை பரூக் அகமது என்பவரின் 07.06.2022 நாளிட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2022 அன்று பெறப்பட்டு, 77/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி காதர்பேட்டை, ஆசிரியர் குடியிருப்பு, முதல்குறுக்கு, முதல் தளம், கதவு எண்.4/75, என்ற முகவரியில் வசிக்கும் திரு. மதுரை பரூக் அகமது என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 17, ஊசி தெருவில் கடந்த 20 வருடங்களாக அப்பகுதியில் வாழும் பொது மக்களின் பயன்பாட்டில் ஒரு பொது ஆழ்துளை கிணறு (Public Bore well) இருந்துவந்த நிலையில், 17வது வார்டின் நகர்மன்ற உறுப்பினர் திரு. P. முகமது அனீஸ் என்பவர் அப்பகுதியில் வசிக்கும் 6 நபர்களுடன் சேர்ந்து மேற்கூறிய ஆழ்துளை கிணற்றை ஒட்டிய வீட்டில் வசித்து வரும் திரு. யாக்கூப் அகமது என்பவரிடம் முறைகேடாக பணம் பெற்று, வாணியம்பாடி நகராட்சியின் அனுமதியின்றி மேற்காணும் ஆழ்துளை கிணற்றை அவ்விடத்திலிருந்து அகற்றும் நோக்கத்துடன் கை அடிபம்பினை முற்றிலும் சேதப்படுத்தி கிணற்றை உபயோகப்படுத்த முடியாத நிலையில் செய்துள்ளனர். எனவே, பொது சொத்தினை சேதப்படுத்தியதற்காக சம்பந்தப்பட்டவர்கள் மீது 1984 ஆம் ஆண்டு பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததை தடுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக் கோரியும், ஆழ்குழாய் கிணறு சேதம் ஏற்படுத்தியதற்கு அபராதத்துடன்

உரிய தொகையும் அவர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டியும் முறையீட்டு மனுதாரர் 25.04.2022 அன்று வாணியம்பாடி நகராட்சி ஆணையரிடம் புகார் அளித்தும் மற்றும் நினைவூட்டு கடிதம் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனு சமர்ப்பித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 16.06.2022 நாளிட்ட கடிதம் மூலம் வாணியம்பாடி நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

வாணியம்பாடி நகராட்சி ஆணையாளர் தனது 23.06.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

“திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சியின் 17வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு. P. முகமது அனீஸ் என்பவர் ஊசி தெருவிலுள்ள ஆழ்துளை கிணறானது இப்பகுதியில் வாழும் மக்கள் எவருக்கும் பயன்படாமல் உள்ள நிலையில் இருப்பதால் கிணற்றை மூடிவிடும்படி நகராட்சி அலுவலகத்திற்கு பொது மக்களின் கையொப்பத்துடன் 08.04.2022 அன்று கடிதம் அனுப்பியிருந்தார் என்றும், பல பணிகளின் காரணமாக மேற்படி ஆழ்துளை கிணற்றின் செயல்பாட்டினை தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, அதனை சீரமைத்து மீண்டும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில், முறையீட்டு மனுதாரர் இதன் உண்மைத்தன்மை அறியாமல் அவசர அவசரமாக நகராட்சிக்கு களங்கம் ஏற்படும் வகையில் புகாரினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். மேற்காணும் ஆழ்துளை கிணற்றை அப்பகுதி வாழ் மக்கள் முழு அளவில் பயன்பெறும் வகையில், இன்னும் சில நாட்களில் அதே இடத்தில் அமைக்கப்படும் என்கின்ற நிலையில் மனுதாரர் புகார் தெரிவித்துள்ளபடி திரு. P. முகமது அனீஸ் மற்றும் 6 நபர்கள் மீது பொது சொத்தினை சேதம் விளைவித்தலை தடுக்கும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லாத நிலையில் இம்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யுமாறு” வாணியம்பாடி நகராட்சி ஆணையாளர் வேண்டியுள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் வாணியம்பாடி நகராட்சி ஆணையரும் 21.07.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.07.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) இதற்கிடையில் மனுதாரர் திரு.மதுரை பருக் அகமது என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த 08.07.2022 நாளிட்ட கடிதத்தில், வாணியம்பாடி பகுதியில் காதர்பேட்டை 17–வது வார்டில் ஊசி தெருவில் கதவு எண்.792 வீட்டு எதிரில் இருக்கும் கைபோர்வேல் (India Mark Pump II) பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்யும்பொழுது தற்காலிகமாக இரும்பு பிளேட் (MS Plate) வைத்து மூடப்பட்டது என்றும், அதை சரிசெய்த பிறகு மீண்டும் பொது மக்களின் பயன்பாட்டிற்கு அதே இடத்தில் பொருத்தப்படும் என வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் 22.06.2022 நாளிட்ட அறிவிப்பு தனது இல்ல முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றும், வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் அறிவிப்பினை ஏற்று, தனது புகார் மனு மீதான தொடர் நடவடிக்கையினை கைவிடும்படி இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

(5) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் மனுதாரரின் 07.06.2022 நாளிட்ட மனுவை திரும்பப் பெறுவதற்கான கடிதம் (நாள். 08.07.2022) ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது.

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, ஊசி தெருவில் உள்ள போர்வேல் பழுதடைந்ததன் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டு, அதை சரி செய்த பின்னர், அதே இடத்தில் பொருத்தப்படும் என்கிற வாணியம்பாடி நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மனுதாரர், தான் அளித்த 07.06.2022 நாளிட்ட மனுவை திரும்பப் பெறுவதாக தெரிவித்த கடிதம் ஆகியவற்றை ஏற்று, இம்மனு மீதான நடவடிக்கையினை கைவிடலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திரு. மதுரை பரூக் அகமது,
கதவு எண்.4/75, முதல் தளம்,
முதல்குறுக்கு, ஆசிரியர் குடியிருப்பு,
காதர்பேட்டை, வாணியம்பாடி – 635 751,
திருப்பத்தூர் மாவட்டம்.

2) ஆணையாளர், வாணியம்பாடி நகராட்சி,
திருப்பத்தூர் மாவட்டம் – 635 752.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை – 600 032

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

29/7/22
செயலாளர்.

29/07/22